# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

8075211

C

1. District : Salem | PS: V & AC, | Year: 2020 | FIR No.: 13/AC/2020 | Date: 06.12.20
மாவட்டம் | காவல்நிலையம் | ஆண்டு | மு.த.அ. எண் | நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Cr. P. C. — Sections பிரிவுகள்: 102.
(iii) Act சட்டம்: — — Sections பிரிவுகள்: —
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 05.12.2020 — Date to : நாள் வரை —
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — — Time to : நேரம் வரை —
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.12.2020 — Time : நேரம் 12.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 05.12.2020 — Time : நேரம் 12.00 hrs.

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Information gathered.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — about 50 Kms West.
Beat Number : முறைக் காவல் எண் —
(b) Address : முகவரி — Regional Transport office, Mettur, Salem District.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. S. Chandramouli.
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : Tr. M. Sundaram (Late
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு —
(d) Nationality : நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Addl. Supdt. of Police.
(g) Address : முகவரி Vigilance and Anti Corruption, Kumarasamy Patty, Salem.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) Tr. M. Seleyan, Regional Transport officer, Mettur, Salem Dt,
2) Tr. T. Murali, Motor Vehicle Inspector Grade-I, O/o the Regional Transport officer, Mettur, Salem District. 3) Tr. M. Sarav[illegible] S/o Murugesan 4) Tr. N. Sathish S/o Natarajan (Private individuals

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— NIL —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

A separate sheet herewith enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Suo motu.

[signature] 6/12/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 06.12.2020 12.00 hrs.

Name: பெயர் S. CHANDRAMOULI.
Rank: நிலை ...................... No. எண் ........
Addl. Supdt. of Police, Vigilance and Anti Corruption Salem.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.13/AC/2020 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 பிரிவு 7 (a) r/w 102 Cr.P.C ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12 ன் விபரம்.

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:**

நேற்று 5.12.2020 ஆம் தேதி முற்பகல் சுமார் 12.00 மணியளவில் நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, மேட்டூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலராகப் பணிபுரியும் திரு.மா.செழியன், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.தா.முரளி மற்றும் அந்த அலுவலக ஊழியர்கள் தங்களது பதவிகளை தவறாகப் பயன்படுத்தி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.முரளி அவர்களின் மைத்துனரும் தனி நபருமான புரோக்கர் திரு.சதீஷ் மற்றும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு.மா.செழியன் அவர்களுக்கு பணம் வசூல் செய்து கொடுக்கும் தனி நபர் திரு.சரவணன் மற்றும் சிலர், மோட்டார் வாகனங்கள் விற்பனை நிறுவனங்களின் அலுவலர்கள் ஆகியோர்கள் மூலம் மேட்டூர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளிலிருந்து வாகனப்பதிவு, ஓட்டுநர் உரிமம் பெறுதல், தகுதிச் சான்று பெறுதல், அனுமதிச்சீட்டு பெறுதல், பெயர் மாற்றம் போன்ற பணிகளுக்காக தங்களது அலுவலகம் வரும் பொது மக்கள் மற்றும் வாகன உரிமையாளர்களிடம் அரசுக்கு கட்ட வேண்டிய கட்டணம் போக கூடுதலாக மேற்படி தனிநபர் புரோக்கர்கள் மூலம் லஞ்சமாக பணம் கேட்டு வசூலிப்பதாகவும், கிடைத்த நம்பத்தகுந்த ரகசிய தகவலின் அடிப்படையில் திடீர் சோதனை மேற்கொள்வதற்காக நான், அரசு சாட்சிகள், காவல் ஆய்வாளர்கள் மற்றும் போலீஸ் பார்ட்டியினருடன் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து 13.00 மணியளவில் புறப்பட்டு 5.12.2020 ஆம் தேதி பிற்பகல் சுமார் 14.30 மணியளவில் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், புதுச்சாம்பள்ளி, பி.என்.பட்டி பேரூராட்சி அலுவலக வளாகம் கதவு எண்.64–ல் இயங்கிவரும் மேட்டூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தினை சோதனையிடப்பட்டது. மேற்படி சோதனையின்போது வட்டாரப்போக்குவரத்து அலுவலக வளாகத்தினுள் அலுவலக கட்டிடத்தின் மேற்குபக்கம் நின்று பேசிக்கொண்டிருந்த தனி நபர்களான திரு.சரவணன் மற்றும் திரு.சதிஸ் அவர்களை மேற்படி அலுவலகத்திற்குள் அழைத்து வரச்செய்து சோதனை செய்ததில் மேட்டூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலருக்கு ஏஜெண்டாக பணிபுரிந்து வருவதாகக் கூறிய திரு.சரவணன்

அவர்களிடமிருந்து அவர் வைத்திருந்த இந்த வாரம் திங்கட்கிழமையில் இருந்து சனிக்கிழமை வரை கனரக வாகன மேற்குறிப்பு செய்தல், ஓட்டுநர் பொதுவில்லை வழங்குதல், வாகன அனுமதி வழங்குதல், புதிய வாகன பதிவெண் வழங்குதல், வாகன அனுமதி சரண்டர் செய்தல், வாகன உரிமம் மாற்றம் செய்தல், பயணிகள் பேருந்து அனுமதி உரிமம் மாற்றம் செய்தல் போன்ற வேலைகளுக்காக அலுவலகம் வந்த பொதுமக்களிடம் இருந்து வட்டார போக்குவரத்து அலுவலருக்காக வசூல் செய்த பணம் மொத்தம் ரூ.39,600/– மற்றும் மேற்படி துண்டு சீட்டுகளில் எவ்வளவு தொகைகள் எத்தனை வாகனங்களுக்கு என்னென்ன பணிகளுக்காக வசூல் செய்யப்பட்டது என்ற விபரங்கள் எழுதப்பட்டிருந்த துண்டு சீட்டுகள், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.முரளி அவர்களுக்கு உதவியாக இருந்து வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு வாகன பதிவு, புதிய ஓட்டுநர் உரிமம் வழங்குதல், தற்காலிக பதிவு, பதிவு சான்றிதழ் புதுப்பித்தல் மற்றும் வாகன பதிவு புதுப்பித்தல் பணிகளுக்காக வரும் பொதுமக்கள் அவர்களுக்கு மேற்படி பணிகளை செய்து கொடுப்பதற்காக மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை–1 திரு.முரளி அவர்களுக்காக பணம் வசூல் செய்து கொடுக்கும் பணியினை செய்து வந்த திரு.சதீஸ் அவர்களிடமிருந்து தொகைகள் மொத்தம் ரூ.97,500/–, புளு மையினால் எழுதப்பட்ட 3 துண்டு சீட்டுகள் மற்றும் சிகப்பு மையினால் எழுதப்பட்ட 1 துண்டு சீட்டு மற்றும் பாக்கெட் டைரி ஆகியவைகள் கைப்பற்றப்பட்டது. மேலும் அ பிரிவு கண்காணிப்பாளர் திரு.T. தியாகராஜன் அவர்களின் டேபிளுக்கு வடக்கு பக்கம் சுவர் ஓரமாக கற்றையாக கிடந்த ரூபாய் நோட்டுகள் ரூ.3,500/–, மேற்படி அலுவலகத்தின் மாடியில் கிழக்கு பக்கமாக உள்ள அறையில் தெற்கு சுவர் ஓரம் கிழக்கு மேற்காக இருந்த 5 அடுக்குகள் கொண்ட கான்கிரீட் அலமாரியில் அதன்மூன்றாவது அடுக்கில் ஆவணங்களுக்கிடையில் தனித்தனியாக மடித்து வைக்கப்பட்டிருந்த ரூ.26,000/– மற்றும் ரூ.22,700/– ஆகியவை திடீர் சோதனைக் குழுவினரால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி சோதனையின்போது மேற்படி அலுவலக வருகைப் பதிவேடு மற்றும் தனிநபர் பண இருப்பு பதிவேடு ஆகியவைகள் விசாரணைக்காக கைப்பபற்றப்பட்டது. இந்த சோதனையின்போது கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.1,89,300/–, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் சொத்துக்களை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. மேற்படி

நடவடிக்கையின்படியும் இதர ஆவணங்களைப் பரிசீலித்தும் மேற்கண்ட எதிரிகள் மேட்டூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு.மா.செழியன், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.தா.முரளி ஆகியோர்கள் தனிநபர்கள் திரு.M. சரவணன் த/பெ.முருகேசன் மற்றும் திரு.M. சதீஸ் த/பெ.நடராஜன் மூலம் அரசுப் பணி செய்வதற்காக கையூட்டு பெறுவது தெரிய வருவதால் மேற்படி எதிரிகள் Sec. 7 (a) of Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 102 Cr.P.C ன்படி குற்றம் புரிந்துள்ளனர் எனத் தெரிகிறது.

எனவே மேற்கண்ட எதிரிகள் மீது குற்ற வழக்கு பதிய அனுமதி வேண்டி காவல் கண்காணிப்பாளர், மேற்கு சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களிடம் வாய்மொழியான அனுமதி பெறப்பட்டு அதன்பேரில் சேலம் ஊ.த.க. பிரிவு குற்ற எண்.13/AC/2020 u/s 7 (a) of Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 102 Cr.P.C ன்படி **6.12.2020** காலை **11.00** மணிக்கு வழக்குப் பதிவு செய்யப்படுகிறது.

இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கையின் அசலினையும், **5.12.2020**ஆம் தேதியிட்ட நடவடிக்கை குறிப்பையும் (Proceedings), நடவடிக்கையின்போது தயார் செய்யப்பட்ட வாக்குமூலங்கள், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் **ரூ.1,89,300/–** ஆகியவற்றை கனம் தனிநீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகள் விசாரணை நீதிமன்றம், சேலம் அவர்களுக்கு அனுப்பியும், அதன் ஒரு நகலினை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பியும் இந்த வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

6/12/2020

கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
சேலம்.